சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் :MCOP:149/2022

2024ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 05ம் நாள் மனுதாரர் சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. T.சண்முகபிரியா கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் நெப்போலியன் (PW1) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

05.04.2024

1) விபத்தில் இறந்துபோனது என் அப்பா. விபத்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திலிருந்து போன் செய்து சொன்னார்கள் யார் என்று எனக்கு தெரியாது. விபத்து எங்கு நடந்தது என்றால் வாழ்வாங்கி. விபத்து சமயத்தில் என் அப்பா இருசக்கர வாகனத்தில் சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் இருந்தது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் அப்பா சென்ற இருச்சக்கர வாகனம் காப்பீடு செய்யப்படவில்லை. விபத்து சமயத்தில் என் அப்பா தலைகவசம் அணிந்திரா என்றால் அணிந்திருந்தார். அவ்வாறு என் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் அப்பா கட்டிடம் கட்டும் மேஸ்திரியாக வேலை செய்தார். என் அப்பா சம்பளத்தை காட்டக்கூடிய ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை. விபத்து சமயத்தில் என் அப்பாவிற்கு வயது 65 ஆகும்.

என் அப்பா கவனக்குறைவாக சென்று பேருந்தின் மோதி விபத்தை ஏற்படுத்தி இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகபடியானது என்றால் சரியல்ல. விபத்து எதிர்மனுதாரர் ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றும் என் அப்பாவின் கவனகுறைவால் ஏற்பட்டது என்றும் அனால் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்ககடமைப்பட்டது அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.